Government of Puducherry
Lieutenant Governor's Secretariat

**No. LGS/PRO/2021** **22nd February 2021**

## செய்தி வெளியீடு

புதுச்சேரி, சண்முகாபுரத்தை சேர்ந்த வடக்கு பாரதிபுரத்தில் வசித்த திருமதி அசினா பேகம் அவர்கள் நேற்றைய தினம் பெய்த கனமழையின் காரணமாக வெள்ளவாரி வாய்க்காலில் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாகவும் தொரிவித்துள்ளார்.

அவரது மறைவினால் அவரை பிரிந்து துயருற்று வாடும் அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு தனது ஆறுதலை தெரிவித்துள்ளார்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு கருணைத்தொகையாக ரூபாய் நான்கு லட்சம் வழங்கவும், அவரது பிள்ளைகளின் படிப்புச் செலவை அரசே ஏற்கும் என்றும் அறிவித்துள்ளார்.